# இணைப்பு

## அண்ணா நூற்றாண்டு நூலக கலையரங்கம், திறந்தவெளி அரங்கம், மாநாட்டுக்கூடம் மற்றும் புத்தக வெளியீட்டு அரங்கங்கள் ஆகியவைகள் ஒதுக்கீடு நிபந்தனைகள்

| | |
|---|---|
| 1. | இந்திய ஜனாதிபதி, பாரதப் பிரதமர், தமிழக முதல்வர், மத்திய மாநில அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளுக்கு முன்னுரிமை வழங்கி மேற்படி கலையரங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு ஒதுக்கீடு வழங்கப்படும். |
| 2. | சென்னை, கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் அமைக்கப்பட்டுள்ள அரங்கங்கள் அரசு விழாக்கள், பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா, பள்ளி ஆண்டு விழா, கலை மற்றும் பண்பாடு சார்ந்த நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், தேசிய / மாநில அளவிலான தொழில்சார் மாநாடுகள், சென்னையில் செயல்படும் தூதரங்கள் நடத்தும் கொள்கை குறித்த கூட்டம், தேசிய பன்னாட்டு நிறுவனங்கள் / குழுமம் நடத்தும் ஆண்டு பொதுக் கூட்டங்கள், பிரசித்தி பெற்ற கல்வி அறிவாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் நடத்தும் விரிவுரை நிகழ்ச்சிகள் மற்றும் அரசால் அனுமதிக்கப்படும் நிகழ்ச்சிகளுக்கு மட்டுமே பயன்பாட்டிற்கு விடப்படும். |
| 3. | மேற்காணும் அரங்கங்கள் ஒதுக்கீடு தனியார் விழாக்கள் மற்றும் இதர நிகழ்ச்சிகளுக்கு 60 நாட்களுக்கு முன்னரும், நாடக சபாக்களுக்கு 40 நாட்களுக்கு முன்னதாகவும் விண்ணப்பம் பெறப்படும். அரசு விழாக்களுக்கு இவ்விதிமுறை பொருந்தாது. |
| 4. | கலையரங்கத்திற்கு ரூ.2,31,224/–, திறந்தவெளி அரங்கத்திற்கு ரூ.83,747/–, மாநாட்டுக்கூடத்திற்கு ரூ.7637/– மற்றும் புத்தக வெளியீட்டு அரங்கத்திற்கு ரூ.2264/– என நாளொன்றுக்கு வாடகையாக வசூலிக்கப்படும். (இக்கட்டணம் வரிகள் உள்ளடங்காதது) |
| 5. | வாடகையாக செலுத்தப்படும் கட்டணம் "முதன்மை நூலகர் மற்றும் தகவல் அலுவலர்– அண்ணா நூற்றாண்டு நூலகம், சென்னை–85", (DD in favour of: "CHIFE LIBRARIAN AND INFORMATION OFFICER", Chennai.) என்கிற பெயருக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கி வரைவோலையாக சென்னையில் மாற்றத் தக்க வகையில் அரங்கங்கள் ஒதுக்கீடு செய்யும் பொழுது வழங்க வேண்டும். |
| 6. | முழு வாடகைத் தொகை செலுத்தப்பட்ட பின்பு தான் அரங்கங்கள் ஒதுக்கீடு உறுதி செய்யப்படும். |

| | |
|---|---|
| 7. | இவ்வொதுக்கீடு தற்காலிகமானது. |
| 8. | ஒதுக்கீட்டினை ரத்து செய்ய முதன்மை நூலகர் மற்றும் தகவல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. |
| 9. | நிகழ்ச்சிகளை நிர்வாகமே ரத்து செய்தால் செலுத்திய வாடகை கட்டணம் பிடித்தம் இல்லாமல் அரசின் விதிமுறைப்படி திருப்பி அளிக்கபபடும். |
| 10. | ஒதுக்கீடு தேதிக்கு 20 தினங்களுக்கு முன்னால் ரத்து செய்தால் வாடகை தொகையிலிருந்து ரத்துக் கட்டணம் 30% பிடித்தம் செய்யப்படும். |
| 11. | ஒதுக்கீடு தேதிக்கு 10 தினங்களுக்கு மேல் 20 தினங்களுக்குள் ரத்து செய்தால் வாடகை தொகையிலிருந்து ரத்துக் கட்டணம் 40% பிடித்தம் செய்யப்படும். |
| 12. | ஒதுக்கீடு தேதிக்குமூன்று தினங்களுக்கு மேல் 10 தினங்களுக்குள் ரத்து செய்தால் வாடகை தொகையிலிருந்து ரத்துக் கட்டணம் 50% பிடித்தம் செய்யப்படும். |
| 13. | ஒதுக்கீடு தேதிக்கு 3 தினங்களுக்குள் ரத்து செய்தால் வாடகை தொகையிலிருந்து ரத்துக் கட்டணம் 75% பிடித்தம் செய்யப்படும். |
| 14. | ஒதுக்கீடு பெற்ற முன்தினம் ரத்து செய்தால் வாடகை தொகை முழுவதும் திரும்ப வழங்கப்படமாட்டாது. |
| 15. | ஒதுக்கீடு கோரிய நிகழ்ச்சி மட்டுமே நடத்த அனுமதிக்கப்படும். |
| 16. | நிகழ்ச்சி நடத்துபவர்கள் அரங்கத்திலுள்ள பொருட்களுக்கு (மின்சாதனப்பொருட்கள், நாற்காலிகள், பிற பொருட்கள்) சேதமடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நிகழ்ச்சி நடத்துபவர்கள் ரூ.20,000/— கூடுதலாக செலுத்த வேண்டும். இத்தொகை சேதாரம் ஏதேனும் இல்லையென்றால் திருப்பி அளிக்கப்படும். |
| 17. | அரங்கம் ஒதுக்கீடு செய்த நேரத்திற்குள் தங்களுடைய நிகழ்ச்சிகளை முடித்துக்கொள்ள வேண்டும். கூடுதலான நேரத்திற்கு, நிகழ்ச்சிகள் ஏதேனும் இல்லையென்றால், அதற்குண்டான தொகை செலுத்த வேண்டும். அடுத்த நிகழ்ச்சிகள் இருந்தால் ஒதுக்கீடு செய்த நேரத்திற்குள் முடித்துக்கொள்ள வேண்டும். |
| 18. | தங்களுக்குத் தேவையான அரங்கம் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அரங்கங்கத்திற்கு வெளியே வாகனங்கள் நிறுத்துவதற்கு மட்டும் தான் அனுமதிக்கப்படும். வாகனங்களுக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டால் அதற்கு நூலக நிர்வாகம் பொறுப்பேற்காது. |
| 19. | அரங்கத்திற்கு வெளியே உள்ள இடங்களில் பந்தல் அமைப்பதற்கும், சாமியானா போடுவதற்கும் உரிய அனுமதி பெற வேண்டும். |

| | |
|---|---|
| 20. | அரங்கத்தின் வராண்டாவில் எந்தவிதமான விற்பனை கடைகளும் இருக்கக் கூடாது. பொருட்காட்சிகள் நடத்துவதற்கு அனுமதி பெற வேண்டும். பொருட்காட்சி நடத்த அனுமதி பெற்றால் அரங்கத்தின் வராண்டாவில் உள்ள தரைகள் சேதமடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். |
| 21. | அரங்கத்திலுள்ள மேடையில் நிகழ்ச்சிகள் நடத்தும் பொதுப்பணித்துறை கண்டிப்பாக மேடை முழுவதும் தரைவிரிப்புகள் பயன்படுத்த வேண்டும். |
| 22. | அரங்க ஒதுக்கீட்டுதாரர் கூடுதலாக தேவைப்படும் ஒலி, ஒளி அமைப்பு மற்றும் மேடையில் கூடுதலான நாற்காலிகளை தாங்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். இதற்கு முதன்மை நூலகர் மற்றும் தகவல் அலுவலரின் முன் அனுமதி பெற வேண்டும். |
| 23. | மின் கட்டண வைப்புத் தொகையாக ரூபாய் 25,000/– கூடுதலாக செலுத்த வேண்டும். அரங்கை ஒப்படைப்பு செய்யும் பொழுது அதிக மின்கட்டணம் போக மீதமுள்ள வைப்புத் தொகை திரும்ப வழங்கப்படும். |
| 24. | அரங்க ஒதுக்கீட்டாளர்கள் விழா நேரங்களில் மின் கட்டண சப்ளை துண்டிக்கும் சமயங்களில் தாங்களே ஜெனரேட்டருக்குத் தேவையான டீசலை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். |
| 25. | அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கங்களில் தனியார் நிகழ்ச்சிகள் நடத்தும் பொழுது பாதுகாப்பு கருதி காவல்துறையின் தடையில்லாச் சான்றிதழ் பெற்று விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். |
| 26. | அண்ணா நூற்றாண்டு நூலகத்திலுள்ள கலையரங்கத்தில் தனியார் நிகழ்ச்சிகள் நடத்தும் பொழுது பாதுகாப்பு கருதி தீயணைப்புத்துறையின் மூலம் தீயணைப்பு வாகனத்தை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். அதற்கான சான்றிதழை நிகழ்ச்சிக்கு 2 நாட்கள் முன்னதாக பெற்று சமர்ப்பிக்க வேண்டும். |
| 27. | அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கங்களை அண்ணா நூற்றாண்டு நூலக முதன்மை நூலகர் மற்றும் தகவல் அலுவலர் அவர்களின் மேற்பார்வையிலும், அறிவுரையின்படியும் தான் பயன்படுத்த வேண்டும். அரங்கங்களில் நடைபெறும் நிகழ்ச்சியில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு அண்ணா நூற்றாண்டு நூலக முதன்மை நூலகர் மற்றும் தகவல் அலுவலர் எடுக்கும் முடிவே இறுதியானது. |

| | |
|---|---|
| 28. | அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கங்களை வாடகைக்கு பயன்படுத்தும் நிறுவனங்கள், அதற்கென்று தனியாக ஒரு நிகழ்ச்சி பொறுப்பாளரை நியமித்து பணிகளை பார்த்துக்கொள்ள வேண்டும். நிகழ்ச்சிகளின்போது, அரங்கங்களிலுள்ள தளவாடப் பொருட்கள் மற்றும் இதரப் பொருட்கள் சேதம் ஏற்படுமாயின் அதற்கான செலவினை மேற்கண்ட நிகழ்ச்சி நடத்தும் பொறுப்பாளரே முழுவதுமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். |
| 29. | உயர் அரசு அலுவலர்கள்/வெளி நாட்டு தூதர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளுக்கு செயலர் அவர்களின் ஒப்புதலையும், இதர நிகழ்ச்சிகளுக்கு முதன்மை நூலகர் மற்றும் தகவல் அலுவலரின் ஒப்புதலையும் பெற வேண்டும். |
| 30. | அரங்கங்களுக்குள் உணவுப் பொருட்கள், சிற்றுண்டி பொருட்கள், குளிர்பானங்கள் மற்றும் தண்ணீர் பாட்டில்கள் எடுத்துவர கண்டிப்பாக அனுமதி கிடையாது. |
| 31. | அரங்கங்களுக்குள் வருபவர்கள் பாதுகாப்புக் கருதி சோதனையிட்டப் பிறகுதான் அனுமதிக்கப்படுவார்கள். மதுபானம் அருந்தி வருபவர் அரங்கத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார். |

**பொது நூலக இயக்குநர் (கூ.பொ)**